பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 09 2025 FRIDAY 7.15 PM

தலைப்புச் செய்திகள்

1. *இயற்கை பேரிடரின்போது மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொள்வோரின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.*

2. *சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களின் பலன்கள் அனைத்துத்தரப்பினரையும் சென்றடைவதை மத்திய அரசு உறுதி செய்யும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.*

3. *பஞ்சாபில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. விரிவான அறிக்கையை பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

4. *பாதுகாப்பு துறையில் பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என இந்தியாவும், சிங்கப்பூரும் முடிவு செய்துள்ளன.*

5. *உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sumit Kundu மற்றும் Neeraj Phogat காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

<<<<<<>>>>>>>

இயற்கை பேரிடரின்போது மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை மேற்கொள்வோரின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இயற்கை பேரிடரால் ஏற்படும் உயிரிழப்புகள் தமக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

உத்தராகண்ட், இமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், பஞ்சாப் மற்றும் அஸ்ஸாமின் பல்வேறு பகுதிகள் இயற்கை பேரிடரால் அண்மையில் பாதிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாடு எப்போதும் துணை நிற்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சவாலான சூழ்நிலையையும் ஒருங்கிணைந்து எதிர்கொண்டால் நாடு வெற்றிபெறும் என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களின் பலன்கள் அனைத்துத்தரப்பினரையும் சென்றடைவதை மத்திய அரசு உறுதி செய்யும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு வரும் 22-ஆம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வருவதை சுட்டிக்காட்டினார்.

நடுத்தர மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

99 சதவீதப் பொருட்கள் ஐந்து சதவீத வரி வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

ஒரு சதவீதப் பொருட்கள் மட்டுமே 40 சதவீத வரி வரம்பில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

புகையிலை, சிகரெட், சொகுசு வாகனங்கள் போன்றவை இந்த வரி வரம்பில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறையின் பல்வேறு சேவைகளுக்கும் முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் வரலாற்று சிறப்புமிக்கது என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன்மூலம் நுகர்வோர்கள் பெரிய அளவில் பயனடைவார்கள் என்றார்.

விவசாயிகள், இளையோர், மகளிர், சிறு-குறு தொழில்துறையினர் என அனைத்துத்தரப்பினரும் பயன்பெறும் வகையில் இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளே சரக்கு மற்றும் சேவை வரி முறை செயல்பாட்டிற்கு வந்ததற்கு காரணம் என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை செலவுகளை வெகுவாக குறைக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பான வரி குறைப்பு பட்டியலையும் பகிர்ந்துள்ளார்.

இந்த சீர்திருத்த நடவடிக்கை மேற்கொண்டதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு எல். முருகன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, இந்த சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு நாடு முழுவதும் அனைத்துத்தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த வரி குறைப்பு நடவடிக்கைகள் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும், இதன்மூலம் பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்றும் தமிழ்நாடு ஹோட்டல் சங்கத் தலைவர் திரு வெங்கட சுப்பு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Sound Byte – வெங்கட சுப்பு - 49 Sec.)

<<<<<<>>>>>>>>>

பாதுகாப்பு துறையில் பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என இந்தியாவும், சிங்கப்பூரும் முடிவு செய்துள்ளன.

இந்தியா-சிங்கப்பூர் இடையேயான பாதுகாப்பு பணிக்குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சிங்கப்பூரில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், இருநாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுக்களின் போது, மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் செயலாக்கம் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>>>>

பஞ்சாபில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து. விரிவான அறிக்கையை பிரதமர் திரு. நரேந்திர மோடியிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பாதிப்புகளை சரி செய்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும், பஞ்சாப் அரசுக்கு மத்திய அரசு வழங்கும் என்றார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தன்னார்வலர்கள் ஆற்றி வரும் பணிகள் பாராட்டுக்குரியது என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>>>

பீகார் மக்களை இழிவுபடுத்தும் வகையில் கேரளா காங்கிரஸ் சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்தது கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், தற்போது அந்த பதிவு நீக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

பீகார் மக்களை இழிவுபடுத்துவதை காங்கிரஸ் வழக்கமாக கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அரசியல் ஆதாயத்திற்காக இதுபோன்ற செயல்களில் காங்கிரஸ் ஈடுபடுவது ஏற்புடையது அல்ல என்றும் திரு சிராக் பாஸ்வான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>>>

நாட்டின் வளர்ச்சியில் உத்தரபிரதேசம் முக்கியப் பங்காற்றுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உத்தரபிரதேசத்தில் பிஜேபி ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், வளர்ச்சி சீராக உள்ளது என்று குறிப்பிட்டார்.

அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை தமது அரசு உறுதி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

உத்தரபிரதேசத்தின் வளர்ச்சியில் எதிர்க்கட்சிகளுக்கு அக்கறையில்லை என்றும் திரு. யோகி ஆதித்யநாத் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>>>>

கர்நாடகாவில் உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்குச்சீட்டு முறையை பயன்படுத்த, அரசு மாநில தேர்தல் ஆணையத்திடம் பரிந்துரைக்க உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு சித்தராமையா கூறியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்காலங்களில் அனைத்து உள்ளாட்சித் தேர்தல்களையும் வாக்குச்சீட்டு முறையிலேயே நடத்த வேண்டும் என்று பரிந்துரைக்க உள்ளதாக தெரிவித்தார்.

உரிய ஆலோசனைகளுக்கு பிறகே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பல்வேறு நாடுகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு பதிலாக வாக்குச்சீட்டு முறை பயன்பாட்டிற்கு வந்துள்ளதை திரு சித்தராமையா சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>>>>

மொரீசியஸ் பிரதமர் திரு. *Navinchandra Ramgoolam* அரசுமுறைப் பயணமாக வரும் 9ஆம் தேதி இந்தியா வரவுள்ளதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தில்லி, மும்பை, வாரணாசி, அயோத்தியா, திருப்பதி ஆகிய இடங்களுக்கும் மொரீசியஸ் பிரதமர் செல்லவுள்ளதாக தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்யும் என்றும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

<<<<<<>>>>>>>>

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Sumit Kundu* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் *Liverpool*-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் *75* கிலோ எடைப்பரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், ஜோர்டானின் *Mohammed Al Hussein*-ஐ வென்றார்.

மகளிர் *65* கிலோ எடைப்பிரிவில் *Neeraj Phogat*-ம் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர் ஃபின்லாந்தின் *Krista Kovalainen*-ஐ வென்றார்.

<<<<<<>>>>>>>>

உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் காயம் காரணமாக *Yastika Bhatia* -க்கு பதிலாக *Uma Chetry* சேர்க்கப்பட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>>

Dominica-வில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Sahaja Yamalapalli* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>>>